பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (09.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 193

## கோப்பாயில் நேற்றும் இரு சடலங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்.9

கோப்பாய் பாலத்துக்கு அண்மையில் நேற்று வியாழக்கிழமை மேலும் இரு சடலங்கள் மிகவும் சேதமடைந்த நிலையில் புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டன.

கடந்த 6ஆம் திகதி இப்பகுதியில் மணல் அகழ்வதற்காகச் சென்றவர்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு ஆலய பூசகரான வைத்தீஸ்வரசர்மா வெங்கடகிருஷ்ணசர்மா (வயது - 50) என்பவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேலும் ஓர் ஆணின் சடலம் புதைகுழியில் மீட்கப்பட்டது.

இதன்காரணமாக, நேற்று வியாழக்கிழமை அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான இடங்களைத் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றுக்காலை அவ்விடத்துக்கு வந்த சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் சந்தேகத்துக்கிடமான இடங்களைப் பார்வையிட்டார்.

கோப்பாய் - கைதடி வீதியில் கோப்பாய் பாலத்துக்கு அண்மையில், வீதியில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத் (2ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரின் சடலம் இனம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்9

கோப்பாயில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தோண்டியெக்கப்பட்ட சடலம், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பரணீதரன் (வயது 22) என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது. சடலத்துடன் இருந்த தொலைபேசி இணைப்பு அட்டை (சிம் காட்) மூலம் உரியவர்களுக்குத் தகவல் அனுப் பப்பட்டு சடலம் அடையாளம் காணப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர் வீட்டிலிருந்து புறப்பட் (2ஆம் பக்கம் பார்க்க)

## அரச குழுவுடன் ஒரே மேசையில் அமர்ந்து பேசும் திட்டத்திற்கு

# புலிகளைச் சம்மதிக்க வைக்க நோர்வே பகீரதப் பிரயத்தனம்

## தமிழ்ச்செல்வன் குழுவோ இம்மியளவும் அசைந்து கொடுப்பதற்கு அடியோடு மறுப்பு

— ஒஸ்லோவிலிருந்து ந. வித்தியாதரன் —

ஒஸ்லோ, ஜூன்9

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக ஒஸ்லோ வந்திருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரையும் - அரச குழுவினரையும் ஒரே மேசையில் சந்திக்க வைப்பதற்கு - நேரடியாக வைத்துப் பேச்சுகளை நடத்துவதற்கு - நோர்வே அனுசரணையாளர்கள் மேற்கொண்ட பகீரதமுயற்சி நேற்று இந்தச் செய்தி எழுதப்படும்வரை (ஒஸ்லோ நேரப்படி பிற்பகல் 2 மணிவரை) இம்மியளவும் பயனளிக்கவில்லை.**

**நேரடிப் பேச்சுகளில் கலந்துகொள்ளுமாறு வழங்கப்பட்ட அழுத்தங்களை, ஆலோசனைகளைப் புலிகள் துளியளவும் ஏற்றுக்கொள்ளவில்லை - அசைந்து கொடுக்கவில்லை.**

இதன் காரணமாக நேற்றைய முதல்நாளின் போது முக்கிய கலந்துரையாடல்களில் புலிகளால் பங்குபற்ற இயலாமற்போனது. ஆனாலும், விடுதலைப் புலிகளின் தூதுக்குழு, தற்போது நோர்வேயில் தங்கியுள்ள் புலிகளின் அரசமைப்பு விவகார ஆலோசனைக் குழுவுடன் நேற்று விரிவான பேச்சுகளை நடத்தியது.

நேற்றுமுன்னிரவுவரை நோர்வே அனுசரணைத் தரப்பில் நோர்வே விசேட பிரதிநிதி ஜோன் ஹான்ஸன் போவர் மற்றும் நோர்வே (10 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கராயனில் கிளைமோர்: மருத்துவக் குழு காயம்!

கிளிநொச்சி அக்கராயன் ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் சிவிலியன்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

திருமுருகண்டிச் சந்தியில் இருந்து பூநகரி - பல்லவராயன்கட்டுக்குச் செல்லும் வீதியில் 11ஆவது மைல்கல் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் நடமாடும் மருத்துவப் பணியில் ஈடுபட்டிருந்த வாகனம் ஒன்று சிக்கியது. இதில் மருத்துவர் ஒருவரும், சுகாதாரத் தொண்டரும், குறித்த வாகனச் சாரதியுமே காயமடைந்தனர். இவர்களில் சாரதியும், சுகாதாரத் தொண்டரும் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளத்தில் கிளைமோர்; படை அதிகாரி பலி!

கொழும்பு,ஜூன்9

வவுனியா - மன்னார் வீதியில் உயிலங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்; மேலும் ஒருவர் காயமடைந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் மீதான பற்றை உறுதிப்படுத்தும்படி பிரபா, மஹிந்தவுக்கு சொல்ஹெய்ம் கடிதம்

ஒஸ்லோ,ஜூன்9

சமாதானத்தின் மீதான பற்றுறுதியை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டுமெனக் கோரும் கடிதத்தை அவர்கள் இருவருக்கும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அனுப்பி வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குழுவினருடன் பேசிய பின்னர் எரிக் சொல்ஹெய்ம் இதனைத் தெரிவித்தார்.

நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், நோர்வே தூதர் ஹன்ஸ் பிரட்ஸ்கர், சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதர் ஜோன் ஹன்ஸ் போவர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஷன் ஆகியோர் நேற்று விடுதலைப் புலிகளின் குழுவினரைச் சந்தித்துப் பேசினர்.

இதன் பின்னர் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாவது:-

"சமாதானத்தின் மீதான பற்றுறுதியை எழுத்து மூலம் உறுதிப்படுத்தும்படி கோரி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கடிதம் அனுப்பியுள்ளேன்.

### பிந்திய செய்தி

இரு தரப்பினருடனும் ஒன்றாக அமர்ந்து நேரடி ஆலோசனை நடத்தவே அழைத்திருந்தோம். இதனை இரு தரப்பினரும் புரிந்திருப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படைமுகாம் மீது தாக்குதல்!

ஏறாவூர்,ஜூன்9

மட்டக்களப்பு - கிரான் பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது முகாமின் முன்னரங்கக் காவ (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிகளில் ஊடுருவித் தாக்குதல்

கொழும்பு, ஜூன்9

மன்னார் மாவட்டத்திலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நேற்று இரு தடவைகள் கிளைமோர் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஒரு சம்பவத்தில் குளப் புனரமைப்புப் பணிக்கென வந்துகொண்டிருந்த சிங்களத் தொழிலாளர்கள் இருவர் உயிரிழந்தனர். முதலாவது தாக்குதல் மன்னாரில் முள்ளிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. அதில் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நண்பகல் 12.50 மணியளவில் மன்னார் பள்ளமடுவிலிருந்து மன்னார் நோக்கிச் செல்லும் வீதியில் இடம்பெற்ற மற்றொரு கிளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக் குழுவை திருப்பி அழைக்க அரச உயர்மட்டம் நேற்றிரவு முடிவு?

### நேரடியாகப் பேச புலிகள் மறுத்ததால் அதிர்ச்சியாம்

கொழும்பு, ஜூன்9

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஒஸ்லோவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேச்சுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அரச தூதுக் குழுவுடன் நேரடிப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்கு தொடர்ந்து மறுப்பார்களாயின் அரச குழுவினரை உடனடியாக நாட்டுக்குத் திருப்பி அழைப்பதென்று அரச உயர்மட்டம் [illegible] தாகத் தெரியவந்தது.

இது குறித்து தமது பேச்சுக் குழுவுக்கு அரசு அவசர பணிப்புரை ஒன்றை விடுத்திருப்பதாகவும் அறியவந்தது.

கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்துப் பேசுவதற்காக ஒஸ்லோ வந்திருக்கும் அரச குழுவில் அதிகாரிகளே அங்கம் வகித்திருப்பதால் அவர்களுடன் நேரடிப் பேச்சுகளை நடத்த முடியாதென விடுதலைப் [illegible] அனுசரணையாளர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தனர்.


நோர்வே அனுசரணையாளர்கள் இதனை உயர்மட்டத்திற்கு நேற்று அறிவித்தனர். இதனைக் கேட்டு கடும் அதிருப்தியடைந்த அரச உயர் மட்டம், புலிகள் தொடர்ந்தும் இது விடயத்தில் கடும்போக்கைக் கடைப்பிடித்தால், அரச தூதுக் குழு நாடு திரும்புவதே நல்லதென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகளே கூடுதலான [illegible] வில் மீறியுள்ளதால் பேச்சுகளில் புலிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





கோப்பாய் பாலத்தடியில் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் இரண்டையும் சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர், யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பருத்தித்துறை நீதிவான் ப.அரியநாயகம், மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் ஆகியோர் சடலங்கள் மீட்கப்படுவதை கண்காணிப்பதையும் அங்கு சமுகமளித்திருந்த யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# கோப்பாய் புதைகுழி பற்றி விசாரணை நடத்தி உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும்!

## யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்9

கோப்பாய் மனிதப் புதைகுழி குறித்து விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளிக் கொணரப்பட வேண்டும்

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

கோப்பாய் பாலத்தடியில் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பாக விடுத்த கண்டன அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐம்பத்தைந்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர். இது தொடர்பாக மனித உரிமை அமைப்புகளிடமும், சர்வதேச அமைப்புகளிடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் மக்கள் முறையிட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறு காணாமல் போனவர்களின் சடலங்கள் இராணுவ முகாமிற்கும் காவலரண்களுக்கும் அண்மையில் இருந்து இன்று மீட்கப்பட்டு வருகின்றன. இந்த மோசமான படுகொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணிப் பகுதியில் அறுநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

மீண்டும் யாழ்.குடாநாட்டில் மனிதப் புதைகுழிகள் உருவாகிவருகின்றன. இது தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும், சர்வதேச மனித அமைப்புகளும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறிலங்கா அரசின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும். இவற்றை உடன் நிறுத்த வேண்டும். இல்லையெனில் இனிவரும் காலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்படும் மிக மோசமான நிலை உருவாகும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கோப்பாயில் காணாமற்போன மதகுரு தொடர்பாக ஏற்கனவே பல முறைப்பாடுகள் செய்திருந்த போதும், இராணுவத்தினரே அவரைக் கைது செய்துள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்திருந்த போதும், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவோ, மனித உரிமை ஆணைக்குழுவோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாகவே அவர் சடலமாக மீட்கப்பட்டார். மறுநாள் இன்னுமொருவர் அதே இடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது இராணுவ நடமாட்டம் நிறைந்த பிரதேசமாக காணப்படுவதால் இந்தப் படுகொலைகள் இராணுவத்திற்குத் தெரியாமல் நடக்க வாய்ப்பேயில்லை. எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வேயின் முன்னாள் பிரதமருடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் சந்திப்பு

ஒஸ்லோ, ஜூன்9

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர் நேற்று முன்தினம் நோர்வேயில் அந்த நாட்டின் முன்னாள் பிரதமரும், ஐக்கிய நாடுகள் சபையின் ஆபிரிக்க பிராந்தியத்துக்கான சிறப்புத் தூதருமான செல்மக்ன ஷண்டவீக் அவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நோர்வே நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மரியாதை நிமித்தம் இடம்பெற்ற இச் சந்திப்பில், இலங்கை அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் குறித்தும், சமாதான முயற்சிகள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் தொடர்பாகவும் நோர்வேயின் முன்னாள் பிரதமருக்கு புலிகளின் பிரமுகர்கள் விளக்கிக் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

# ‘லைசென்ஸ்’ பெற விண்ணப்பித்தோருக்கு செயல்முறைப் பரீட்சைக்கான தினங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தோருக்கான செயல்முறைப் பரீட்சை நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி நேற்று நடைபெறவிருந்த செயல்முறைப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதியும், இன்று நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதியும் நாளை நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன.

மேலும் எதிர்வரும் 12 மற்றும் 14ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த செயல்முறைப் பரீட்சைகள் முறையே இம்மாதம் 29 மற்றும் 30 திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 26, 27, 28 ஆகிய திகதிகளில் எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை முறையே எதிர்வரும் 19, 21, 22 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளன.

கடந்த மாதம் 2 மற்றும் 3ஆம் திகதிகளில் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முறையே எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் செயல்முறைப் பரீட்சை இடம்பெறும். மேற்குறிப்பிட்ட தினங்களில் செயல்முறைப் பரீட்சை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

### கணக்கியல் பரீட்சை

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இறுதிப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) எதிர்வரும் 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் த.இராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கு வழிகாட்ட உதவிப் பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வழிகாட்டல் உதவிப் பிரிவு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இயங்கும் ஆழிப்பேரலை தகவல் மையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு, ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் ஆகியவை இணைந்து இந்த உதவிப் பிரிவை ஏற்படுத்தியுள்ளன.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை பெறும் வழிவகைகள் மற்றும் அதற்கான வழிகாட்டல்கள் குறித்து இந்த உதவிப் பிரிவில் பொதுமக்கள் ஆலோசனைகளைப் பெறலாம். இது தொடர்பான மேலதிக தகவல்களை 021-2227921 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

# ஜோஸப் எம்.பி. மறைவுக்கு சபையில் இன்று அனுதாபம்

மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் மறைவு தொடர்பிலான அனுதாபப் பிரேரணை மீதான உரை இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அனுதாபப் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இதர தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இந்த விவாதத்தின் மீது உரையாற்றுவார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி. மறைவு தொடர்பான அனுதாபப் பிரேரணையை இன்று சபையில் சமர்ப்பிப்பதென நேற்று நாடாளுமன்றத்ில்கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுச் சென்ற சமயம் காணாமற்போனார் என்று அவரது பெற்றோர் கடந்த மாதம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப் பாடு செய்திருந்தனர்.

நேற்று மீட்கப்பட்ட சடலங்கள் இது வரை அடையாளம் காணப்படவில்லை.

கடந்த சுமார் இரு மாத காலத்தில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்துடன் அல்லது யாழ்.போதனா வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு சடலங்களை அடையாளம் காண உதவும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குட்பட்ட தரவைப் பகுதியிலேயே முன்னர் இரு சடலங்களும் மீட்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, அப்பகுதியில் மேலும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் நிலவியதை அடுத்து அங்கு புதைகுழி தோண்டுவதற்கு முடிவுசெய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரி ரி. சுவேந்திரராசா, சட்டத்தரணி மு.றெமீடியஸ் மற்றும் கிராமசேவகர்கள், கண்காணிப்புக் குழுவினர், பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையில் சந்தேகத்துக்கிடமான இடங்கள் முதலில் பார்வையிடப்பட்டன. வீதியில் இருந்து சுமார் 500 மீற்றருக்கு உட்பட்ட தரவைப் பகுதியில் இக் குழுவினர் சந்தேகமான இடங்களைப் பார்வையிட்டனர்.

இதன்போது வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் - முன்னர் இரு சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்ட அதேவரிசையில் புதைகுழியொன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தவேளையில், யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரிய நாயகம், மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் ஆகியோரும் சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

இதனையடுத்து, சட்டவைத்திய அதிகாரி தலைமையிலான குழு சந்தேகத்துக்கிடமான குழியைத் தோண்டியது. அங்கு இரண்டு சடலங்கள் ஒன்றன் மேல் ஒன்றாகப் போடப்பட்டிருந்தன. சுமார் நான்கு அடி ஆழத்தில் இந்தச் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன. இரண்டும் ஆண்களுடைய சடலங்கள் என்பது தெரியவந்தது. இரு சடலங்களும் வெவ்வேறாகத் தோண்டி எடுக்கப்பட்டன. ஒரு சடலம் நீல நிறச் சாரம் அணிந்த நிலையில் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது. மற்றைய சடலம் ஆண்களுக்கான உள்ளாடை, பெனியன் ஆகியன அணிந்த நிலையில் காணப்பட்டது. அத்துடன், சடலம் ஒன்றின் கையில் இயங்கும் நிலையில் ‘றொலக்ஸ்’ கடிகாரம் ஒன்று காணப்பட்டது. ஆண்கள் அணியும் கை வளையம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. இந்த இரு சடலங்களும் சுமார் 50 நாள்கள் காலப்பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இரு சடலங்களும் வெவ்வேறாகப் பொதி செய்யப்பட்டுப் பொலிஸாரினால் பரிசோதனைக்கென எடுத்துச் செல்லப்பட்டன.

இதன் பின்னர் அப் பகுதியில் வேறு புதைகுழிகள் உள்ளனவா? என்பது குறித்து ஆராயப்பட்டது. அதன் போது அங்கு சமுகமளித்திருந்த நீதிவான்கள், அரச அதிபர், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி, கிராம சேவையாளர்கள் ஆகியோர் சடலங்கள் மீட்கப்பட்ட கோப்பாய் தரவைப் பகுதி உவர் நீர்த் தடுப்பு அணையோரம் வேறு சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் இல்லையென முடிவுக்கு வந்தனர். இதனையடுத்து அங்கு தோண்டும் பணி நிறுத்தப்பட்டது. அப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த இராணுவப் பொலிஸாரின் காவலும் நேற்று இரவுடன் விலக்கப்பட்டது.

சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து ஒரு புறத்தே சுமார் 200 மீற்றர் தொலைவிலும், மறுபுறத்தே சுமார் 300 மீற்றர் தொலைவிலும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளன. அத்துடன் 100 மீற்றர் தூரத்தில் பாலத்தடியில் ஓர் இராணுவக் காவலரணும் அமைந்துள்ளது. (8,12,15,75,190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# நீதி, நியாயம் கேட்பதற்கு அருகதையற்ற தரப்புக்கள்

தனி நாடாக இருக்காத இலங்கையைப் பலவந்தமாக ஒன்றுபடுத்தி, 1833 இல் அப்போதைய காலனித்துவ ஆதிக்க நாடான பிரிட்டன் செய்த திருகுதாளமே இன்றைய இலங்கையின் அவல நிலைக்குக் காரணம் என்பதை நேற்று இப்பத்தியில் பார்த்தோம்.

தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் தன் நிர்வாக வசதிக்காகத் தான் திணித்த வலோற்கார இணைப்பு நீண்ட காலத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாதது என்பதை 'வெள்ளைக் கனவான்களான' பிரிட்டிஷாருக்கு ஆரம்பத்திலேயே உறைப்பாகப் புரியத் தொடங்கி விட்டது என்பதுதான் உண்மை.

பிரிட்டிஷார் தமது ஆட்சியதிகாரத்தைக் கைகழுவி விட்டுப் புறப்படப்போன போதே இந்திய உபகண்டம் கலவரக் காட்சிகளைக் கண்டது. வெள்ளைக்காரக் காலனித்துவ நாடான இந்தியா, அங்கு இரு தனித்தனித் தாயகங்களை - நாடுகளை - கண்டது. இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரிந்தது.

மலாயாவுக்கும் அதே கதி. ஒருபுறம் மலேசியாவாகவும் மறுபுறம் இலங்கையின் முப்பதில் ஒரு பங்கு அளவு கொண்ட சிங்கப்பூராகவும் அது பிளந்தது.

அதன் பின்னர் கூட அது நிற்கவில்லை. சுமார் இரண்டரை தசாப்த காலம் கடந்த பின்பும் பாகிஸ்தான், இரண்டானது. மேற்குப் பாகிஸ்தான் - பாகிஸ்தானாகவும், கிழக்குப் பாகிஸ்தான் - பங்களாதேஷாகவும் உருவெடுத்தன.

இப்படி காலனித்துவ காலத்தில் ஒன்றாக்கப்பட்ட ஆட்சி அதிகார மையங்கள் தத்தமது தனித்துவங்களுக்கு அமைய - தாயகங்களுக்கு இணங்க - துண்டாகி தனி அரசுகளானமை புதுமையான ஒன்றல்ல. கண்டிக்கப்பட வேண் டிய ஒன்றுமல்ல.

இலங்கைத் தீவின் விவகாரத்தில் இந்த விடயம் சற்று தாமதமாகி யிருக்கின்றது. அவ்வளவே.

அதற்கு அடிப்படைக் காரணம் சிங்களப் பெரும்பான்மையினர் மீது நமது முன்னைய தமிழ்த் தலைமைகள் வைத்திருந்த நம்பிக்கையும், தமிழர்களுக்கே பொதுவான சகிப்புத் தன்மையும்தான்.

பல கலாசார, பல மத, பல்லின பிராந்தியமாக விளங்கும் இலங்கைத் தீவை சிங்கள - பௌத்த நாடாகக் காணும் பேரினவாதிகளின் கொடூரப் போக்குக்கு இடம்கொடுக்க முடியாமல் -

தமது இனத் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைத்து, அதை ஆக்கிரமித்து கபளீகரம் செய்யும் சிங்களத் தீவிர வாதத்தின் வலோற் காரத்துக்கு இனியும் இடம்தர முடியாத இக்கட்டில் -

தங்களின் மொழி உரிமை, கல்வி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, கல்வி உரிமை என எல்லா இன அடிப்படைக் கட்டுமானங்களும், வாழ்வியல் உரிமைகளும் சிதைக்கப்பட்ட கையறு நிலையில்தான் -

தமது இறுதித் தீர்வாகத் தேசத்தை - தாயகத்தை - மீட்கும் இந்த இனப்போரில் தங்களை ஆகுதியாக்கும் தீர்மானத்துக்குத் தமிழர்கள் வந்தார்கள்.

இதைக் கூட எடுத்த எடுப்பில் தமிழர்கள் செய்து விடவில்லை. மூன்று தசாப்த காலம் நீதி, நியாயம், உரிமை வேண்டி - சிங்கள அரசுகளின் அடக்கு முறைக்கு எதிராக - தமிழர்கள் அஹிம்சை வழியில், சாத்வீக நெறியில், காந்தீயப் பாதையில் போராட்டங்களை நடத்தினார்கள். சர்வதேசத்தின் கவனத்தை இலங்கைத் தீவின் பக்கம் திருப்பவைத்துத் தமக்கு நியாயம் பெற முயன்றார்கள்.

ஆனால், அவை எவையும் வெற்றியைத் தரவில்லை. பயன் கிட்டவில்லை.

தமிழர்களைப் போல குடிசனத் தொகையிலும், வாழ்விடப் பிரதேசத்திலும் பல மடங்கு பருத்திருக்கும் பெரும்பான்மையினரான சிங்களவர்கள், தமிழர்கள் மீதான அடக்கு முறையைக் கைவிடத் தயாரில்லை என்பதைத் தங்களது ஆதிக்க வெறி மூலம் மீண்டும் மீண்டும் நிரூபித்தார்கள்.

இலங்கைத் தீவில் இரு இனங்களினதும் தாயகங்களையும் தமது நிர்வாக முறைமைக்காகப் பலவந்தமாகத் திணித்த பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளோ -

அல்லது -

இன்று தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி விமர்சித்து, நியாயம் பிழக்கின்ற சர்வதேச சமூகத்தினரோ -

அஹிம்சை வழியில் தமது உரிமைகளுக்காகத் தமிழர் போராட்டம் நடத்தியபோது, அந்தப் போராட்டத்துக்கு நியாயமான முறையில் ஆதரவு தரவில்லை. சிங்களப் பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மைத் தமிழர்களுக்கு நீதிபெற்றுத் தரவேயில்லை. பெரும்பான்மை இனம் என்ற பலத்தை வைத்துக் கொண்டு - ஜனநாயகத்தில் உள்ள பின்னடைவான, குறைபாடான தன்மைகளைப் பயன்படுத்தி - ஈழத் தமிழர்களின் வாழ்வியல் உரிமைகளைத் தொடர்ந்து பறித்துக் கொண்டிருக்கும் சிங்களவர்களிடமிருந்து தமிழர்களுக்கு உரியதைப் பெற்றுக் கொடுக்கப் பூர்வாங்க முயற்சிகளைக் கூட எடுக்கவில்லை.

இந்த நிலைமையில்தான் தமிழர்கள் தங்களது இறுதி முயற்சியாக - வேறு வழி ஏதும் இல்லாத நிலையில் - தங்களையே ஆகுதியாக்கும் இந்த விடுதலை வேள்வித் தீயை ஆயுத வழிப் போராட்டமாக முன்னெடுத்தனர். இன்று அதில் கணிசமான வெற்றிகளைக் கண்டு முன்னேறியிருக்கின்றனர்.

தமிழர் தாயகத்தையும், சிங்களவர் தாயகத்தையும் ஒன்றிணைத்துத் தாம் புரிந்த தவறுக்கு சரியான பிராயச்சித்தத்தைத் தேடித் தராத பிரிட்டனும், அதனுடன் அணிவகுத்து நிற்கும் சர்வதேச சமூகமும், தமிழர்கள் தங்கள் உரிமைகளைத் தாங்களே வேண்டி மூன்று தசாப்த காலம் அமைதி வழியில் போராடியபோது அதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டு அதற்குப் பக்கபலமாக நின்று அதனை வலுப்படுத்தத் தவறிவிட்டு, இப்போது வேறு வழியின்றித் தமிழர்கள் ஆயுதப் போராட்ட நெறிமுறையை நாடி, அதில் முன்னேறும்போது அதைப் 'பயங்கரவாதமாக' சித்திரிப்பதற்கு எந்த உரிமையும், தகுதியும், தகைமையும் அற்றவை.

செய்ய வேண்டியதை, செய்ய வேண்டிய சமயத்தில் செய்யத் தவறிவிட்டு இப்போது தத்துவம் பிழப்பதில் அர்த்தமுமில்லை; நியாயமும் இல்லை.




யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதியிலுள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் பாடசாலை விடுமுறையை முன்னிட்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் இலவச சித்திரப் பயிற்சிப் பட்டறையை நடத்தியது. பயிற்சிப் பட்டறையில் இணைந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும், பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்புத்துறை விரிவுரையாளர் சி.சண்முகராஜா, பயிற்சி அளித்த இளம் ஓவியக் கலைஞர் ஒருவரைக் கௌரவிப்பதையும் படங்களில் காண்லாம்.

# இது அரசியல் சித்து விளையாடும் நேரமல்ல; அனைவரும் அமர்ந்து இருந்து பேசும் தருணம்

## கடந்த காலத்தை மறந்துவிடக் கோருகின்றார் அனுரா

கொழும்பு, ஜூன் 9

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் கடந்த கால நிகழ்வுகளை மறந்து விட்டு அனைத்துத் தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து பேச வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது. இது அரசியல் சித்து விளையாட்டு நடத்துவதற்கான நேரம் அல்ல. இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான அனைத்துப் பேச்சுக்களிலும் முஸ்லிம்கள் பங்களிப்பு அவசியம். இல்லையெனில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிரச்சினைகள் உருவாவதைத் தவிர்க்க முடியாது.''

-இவ்வாறு கூறினார் சுற்றுலாத் தறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது:-

''இந்நாட்டில் நிலவுகின்ற இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும். இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கின்றன. என்னதான் பழைய அனுபவங்கள் இருந்தாலும் அவற்றை மறந்து விட்டு எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இனப்பிரச்சினைக்கு பேசித் தீர்வுகாண முயல வேண்டும். இது அரசியல் விளையாட்டு நடத்துவதற்கான நேரமல்ல.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்களின் பங்குபற்றுதல் மிகவும் அவசியமானது. ஒவ்வொரு பேச்சுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் அழைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும். மூன்றிலொரு பங்கு முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் வாழ்கிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவுக்கு நன்றி தெரிவித்தார்.

கடந்த 23 வருடங்களாக அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் விவாதங்களில் உரையாற்றி வருகின்றோம். ஆனால், உருப்படியான விஷயங்கள் எதுவும் நடக்கவில்லை. நீண்டகாலத்துக்குப் பின்னர்தான் அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையில் உரையாற்றுகின்றேன்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலமே இலங்கையின் இனப் பிரச்சினை யைத் தீர்க்க முடியுமென்பதே சர்வதேச நாடுகளின் நிலைப்பாடாகும்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா.

(க)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு: நியமனக்கடிதம் கிடைக்காத பரீட்சகர் கவனத்துக்கு!

அச்சுவேலி, ஜூன்9

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பித்த உதவிப் பரீட்சகர் நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் மதிப்பீட்டு நிலையங்களில் பிரதம பரீட்சார்த்திகளுடன் தொடர்புகொண்டு உதவிப்பரீட்சகர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால், விடைத்தாள் மதிப்பிடும் பணியில் இணைந்து கொள்வதற்கு பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்களின் சட்டபடி வேலை போராட்டத்தினால் உதவிப் பரீட்சகர் பலருக்கு நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை. இதுவிடயமாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, பரீட்சைத் திணைக்களம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது. இது தொடர்பான குறிப்புகள் பிரதம பரீட்சகர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உரியமுறையில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதம பரீட்சகர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர் உதவிப் பரீட்சகர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி மதிப்பீட்டுப் பணியில் இணைந்து கொள்ளலாம். (11)

# அறநெறிப் பாடசாலையில் பௌர்ணமி தின விழா

யாழ்ப்பாணம், ஜூன்9

தாவடி ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம், நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையுடன் இணைந்து நடத்தும் பௌர்ணமி தினவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை தலைவர் பிரம்மஸ்ரீ கு.தியாகராசக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமப் பொருளாளர் க.தெய்வேந்திரம், 'அறநெறி வாழ்க்கை' என்னும் தலைப்பில் ஆன்மீக உரை நிகழ்த்துவார்.

தீப ஆராதனை, தெய்வத் திருவுருவப் படங்கள் அன்பளிப்பு செய்தல் என்பனவும் இடம்பெறும்.

தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் 'எழுந்திரு விழித்துக்கொள்' என்னும் பொருளில் அமைந்த புகைப்படக் கண்காட்சியும் ராமகிருஷ்ணமிஷன் புத்தகவெளியீடுகளின் விற்பனையும் இடம்பெறும். (204)

## உதயவாக்கு

**வாழ்க்கை என்பது படிப்பினை. அந்தப் படிப்பை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் அதைச் செயலில் காட்டுவதற்கும் சாதனமாயிருப்பது சமுதாயம். - மாஜினி**

## நாளை

**வைகாசி - 27**
**சனிக்கிழமை**
**10.06.2006**
**திதி : சதுர்த்தசி**
**பின்னிரவு : 12.34**
**நட்சத்திரம் : அனுஷம்**
**முழுவதும்**
**சுபநேரம் : 02.52-04.22**
**ராகுகாலம் : 08.52-10.22**

# சமய அறிவுப் போட்டி

வலி.தென்மேற்கு, ஜூன்9

மாதகல் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மாதகல் இந்து சமய விருத்திச் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே சைவ சமய அறிவுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இந்தப்போட்டிக்கான பரீட்சை நடைபெறவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தீன. (135)

# சட்டவிரோத மணல் அகழ்வு கத்திவெட்டில் முடிந்தது

அரியாலை, ஜூன்9

கொழும்புத்துறை பகுதியில் இரு இளைஞர் குழுக்களிடையில் ஏற்பட்டு வந்த கைகலப்பு இறுதியில் கத்திவெட்டில் முடிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றும்போதே இந்த கைகலப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதமும் சட்டவிரோதமாக மணல் ஏற்றியபோது இரு இளைஞர் குழுக்களிடையே கைகலப்பும் கத்திவெட்டும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் அதேபோன்றதொரு கைகலப்பு நேற்று முன்தினம் சட்ட விரோதமாக மணல் ஏற்றும்போது இடம்பெற்றுள்ளது. (17)

# வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கைத்தொழிலாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.தென்மேற்கு, ஜூன் 9

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு கைத்தொழிலாளர்கள் சங்கம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோக நாயகம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்க நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி சங்கத்தில் பிரதேச செயலகப்பிரிவில் செயற்பட்டு வரும் கைத்தொழிலாளர்கள் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடைப்பந்தாட்ட சங்கக் கூட்டம்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறும்.

## விவசாயிகளுக்கு 12 லீற்றர் மண்ணெண்ணெய்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாய அட்டை ஒன்றிற்கு 12 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகித்து வருவதாக சங்கத்தின் தலைவர் எஸ்.குமரவேல் தெரிவித்தார். இந்த மண்ணெண்ணெய் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், சங்கத்தின் கிளைகளில் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (17)

## உற்சவ ஏற்பாட்டுக் கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருவிழா ஏற்பாடுகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு வேலணை பிரதேச செயலர் முகுந்தகோபன் தலைமையில் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (111)


**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The INGO consortium Solidar, which includes Norwegian People's Aid (NPA), Swiss Labour Assistance (SAH) and ASB Sri Lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding 5 communities in the North-East in the district of Jaffna as part of its Phase III Post-Tsunami Reconstruction & Rehabilitation Plan. One component of the Programme is aimed at the restoration of livelihoods regarding different sectors such as the agricultural sector and the fishery sector. Solidar is now looking to fill the following positions to assist in the socio-economic mobilization and community development activities.

**MICROFINANCE EXPERT**

An experienced person is required to develop jointly with the Program Manager and the team of community development officers a sustainable system for Microfinance to support livelihood activities and income generation projects based on the village level. Apart from taking responsibility in the planning, implementation and management of the Microfinance component it is expected that the expert will directly liaise with partner organizations, such as CBOs, local NGOs, and with the established banking sector. Capacity building and facilitating the implementation of a training program with relevance to Microfinance activities will form a core element of the work.

A proven track record of working with local communities in the North - East is essential, as is an ability to speak fluent Tamil and English Languages. A high degree of self initiative, but also team spirit is required.

**SHORT-TERM CONSULTANT (3 MONTHS) FOR THE FISHERY SECTOR**

An experienced person is required to assess the needs in the fishery sector in the project area of Solidar and develop project activities that could be undertaken in order to address these needs and restore sustainable livelihoods. The assessment and project identification should be done in a participatory manner by involving the local stakeholders. Moreover, it is expected that the consultant assess the capacities and training needs of the local partner organisations.

A proven track record of working with local communities in the North-East and a thorough knowledge of the Fishery Sector are essential, as is an ability to speak fluent Tamil and English Languages. A high degree of self initiative, but also team spirit is required.

Applicants should be willing to be based in Kilinochchi.
Please send your CV and application letter to katbergmann@web.de by 30th June 2006.
Alternatively please mail to:

Kathrin Bergmann
Solidar - Office
156 Jaffna Road Paranthan - Kilinochchi (C/49593)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




வேலணை,
கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் ஸ்கொட்லாண்டை வதிவிடமாகவும் கொண்ட **சதீஸ்- நித்தியா** தம்பதியரின் **செல்வப்புதல்வன் அனுசன்** முதலாவது பிறந்தநாளை இன்று (09.06.2006) வெள்ளிக்கிழமை ஹொலண்டில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மப்பா, அம்மம்மா, நிசாந்தி அன்ரா, சேந்தன் மாமா (பரிஸ்), அப்பப்பா, அத்தைமார், மாமாமார் (லண்டன்) கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**முருகானந்தம் குடும்பம்**
(கொழும்புத்துறை).

(50981)(32.11.19.26)



உ
மாவை கொல்லங்கலட்டி
திருவருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
**வசந்த மகோற்சவப் பெருவிழா**

*02-06-2006 கொடியேற்றத்துடன் மகோற்சவம் வெகுசிறப்பாக நடைபெறுகிறது. நாளை (10-06-2006) சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கத் திருவிழா, திருவூஞ்சல் என்பன நடைபெறும். மெய்யடியார்கள் வந்து சுவாமி தரிசனம் செய்து இஷ்டசித்திகளைப் பெறுவீர்களாக.*

*தெல்லிப்பழை தடை முகாமிற்கு வரும் பக்தர்கள் பஸ்மூலம் ஆலயத்துக்கு அழைத்துச்செல்லப்படுவர். தினமும் அன்னதானம் நடைபெறும்.*

(50834)(11.19.26) -அறங்காவலர்.



## வேலை ஆள் தேவை

யாழில் பிரபல பயண நிறுவனத்திற்கு TICKETING AND COURIER SERVICE அனுபவமுள்ள, MOTOR CYCLE ஓடக்கூடிய ஆள் தேவை. வயது 40-55 வரை விரும்பத்தக்கது.

10-06-2006 காலை 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**32, மணிக்கூண்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.**
தொ. பே. 0212223916
(சி/49592)(26.11.19)


## மிருசுவில் பாடசாலை மாணவர் கவனத்துக்கு !

யாழ்ப்பாணம்,ஜூன்9

மிருசுவில் றோ.க.த.க.வித்தியாலயம் மற்றும் அதனுடன் இணைந்து இயங்கும் எழுதுமட்டுவாள் அ.த.க.வித்தியாலயம், எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம் ஆகியவற்றின் சகல ஆசிரியர்களையும் தரம் 1,2 தவிர்ந்த ஏனைய வகுப்பு மாணவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மிருசுவில் றோ.க.த.க.வித்தியாலயத்துக்கு சமுகம் தருமாறு மூன்று பாடசாலைகளின் அதிபர்களும் கேட்டுள்ளனர். (204)

## கண்காட்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்9

எவர்சைன் கல்வி நிலையம் மற்றும் எவர்சைன் குழந்தைகள் உலகம் முன்பள்ளி என்பன இணைந்து நடத்தும் ஆங்கில மொழிமூலமான கண்காட்சிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம், 123, பிறவுண் வீதியிலுள்ள எவர்சைன் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எவர்சைன் கல்வி நிலைய இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் பற்றிக் பால்ராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பிரதி அதிபர் சு.தியாகலிங்கம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தியாகலிங்கம், யாழ்.இந்து மகளிர் கல்லூரிஅதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (204)


## கண்ணீர் அஞ்சலி

எமது முன்பள்ளிப் பாலகி செல்வி **வெ. கம்சியா** அவர்களின்
அன்புத் தந்தை
**வைத்தீஸ்வர ஐயா-வெங்கடகிருஸ்ண சர்மா**
அவர்களின் அகால மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ,அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் ச.ச.நிலைய முன்பள்ளிஆசிரியர்கள், பாலர்கள்.**
(சி/49586)(26.11.19)



## கண்ணீர் அஞ்சலி

ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் பிரதம குருக்கள்
**திரு. அனந்த விஜயக்குருக்கள் மதியாபரணக் குருக்களின்**
அன்புத் தாய்
**திருமதி அனந்த விஜயக்குருக்கள் மங்கையர்க்கரசியம்மா**
அவர்கள் 05.06.2006ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பில் இயற்கையெய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபையினர்.**
(சி/49594)(26.11.19)



**ஒத்துமாறல்**

*கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலையில் இருந்து யாழ்.மாவட்ட தேசிய பாடசாலைக்கு Chemistry ஆசிரியர் மாற விரும்புகிறார்.*
**தொடர்பு: 0776038913** (50382)



## குத்தகைக்கு

*யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.*
**தொடர்பு: 0777 178493** (50381)



# மெகா
## விசேட சிறப்புச் சலுகை

60% நேரடிக் கட்டணக் கழிவு

இம்முறை A/L பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் கணினி உயர்கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயனடையும் விதமாக ஏசியன் கொம்பியூட்டர்ஸ் மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறிகளுக்கு 60% நேரடிக் கட்டணக் கழிவை வழங்குகின்றது. அத்துடன் இலவச பாடநூல்கள், தவணைமுறையில் கட்டணங்கள் மற்றும் குறுகிய காலத்தில் பாடநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பும் வழங்கப்படவிருக்கின்றது. இச்சலுகை பற்றிய மேலதிக விபரங்களையும், இலவச ஆலோசனைகளையும் கீழ்கண்ட எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.



EDUCATION PARTNERS
**CSC** COMPUTER EDUCATION
ISO 9001:2000 Certified Institution

Tally Graduate Academy - India

TATA NEXT GENERATION

LIMITED STUDENTS ONLY

Computer Education for Success

1. Advanced Diploma in Software Engineering
2. Diploma in Office Automation
3. Professional Diploma in Graphic Design
4. Adv. Dip. In Macromedia Applications
5. Adv. Diploma in Hardware & Networking
6. Honours Diploma in Computer Application
7. Diploma in PC Professional
8. Dip. in Advanced Software Technology
9. Diploma in Web Design & Development
10. Tally Graduate Training

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. 077-3039587 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணையில் புற்றுநோய் சிகிச்சைத்தொகுதி; கனவு நனவாக பலரது ஒத்துழைப்பும் தேவை!

**தெல்லிப்பழையில் நிறுவப்பட்ட கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு இன்று தனது ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்து, இரண்டாவது ஆண்டில் காலடி வைக்கிறது. அந்த சிகிச்சைப் பிரிவின் தோற்றம், அதன் சீரிய பணிகள் தொடர்பாக விரிவாக விளக்குகின்றார் கட்டுரையாளர்.**

வடபகுதி மக்கள் பல வருடங்களுக்கு முன்பே வட புலத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என பலவகையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்தனர்.

## தெல்லிப்பழை கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவில் ஒரு வருடத்தில் 507 நோயாளர்கள் பயன்பெற்றனர்

இதன் விளைவாக மக்கள் நிதியத்தை அடிப்படையாகக் கொண்டு மகரகம புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தையொத்த ஒரு நிலையம் ஒன்றை வடபகுதியில் அமைப்பதற்காக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் ஒரு பகுதியில் 1982 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதியன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

பின்னர் கனேடிய அரசின் உதவியுடன் அங்கு 'கோபோல்ட்' (Cobalt) இயந்திரம் தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டு இருக்கையில், நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக கதிர்வீச்சு சிகிச்சை ஆரம்பிக்கப்பட முன்னரே அணுக் கதிர்த் தொழிற்பாடுடைய 'கோல்போல்ட்' அணுக்குளிகை அந்த இயந்திரத்தில் இருந்து அகற்றப்பட்டு தென்பகுதிக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் இந்தக் கட்டடம் இயந்திரத்துடன் தூர்ந்துபோய் மூடப்பட்டு இருந்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் கதிர்வீச்சு சிகிச்சையை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. வடபுல மக்கள் புற்றுநோய் சிகிச்சைக்காக வடபுலத்தில் இருந்து தென்புலத்தில் உள்ள மகரகம என்னும் தனிச் சிங்களப் பிரதேசத்துக்குத் தொடர்ந்தும் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவானது.

இவர்கள் பலவகை கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியகட்டாயசூழலும் உருவானது. குறிப்பாக :

★ பிரயாணக் கஷ்டம்:- கடல், தரை, ஆகாய மார்க்கமாக அவ்வப்போது நிலவிய அரசியல் சூழலுக்கு ஏற்ப நெடுந்தூரப் பயணத்தை மேற்கொண்டமை.


★காலவிரயம் :- கூடிய காலம் அங்கேயே தங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலை மற்றும் பயணத்துக்காக காத்திருக்க வேண்டிய நிலை.

★ குடும்பப் பிரிவு:-குடும்பத்தில் ஒரு பகுதியினர் மகரகம புற்றுநோய் வைத்திய சாலையிலும் மற்றோர் பகுதியினர் வடபுலத்தில் ஏங்கிய நிலையிலும் உள்ள தன்மை.

★ உறவினர்கள் நோயாளியை கிரமமாகப் பார்க்க முடியாத, உதவ முடியாத, ஆறுதல் கூற முடியாத தன்மை.


★ மொழிப்பிரச்சினை:- மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பெரும்பான்மையான வைத்தியர்களுக்குத் தமிழ் தெரியாது. நூறு வீதமான தாதிமார் மற்றும் சிற்றூழியர்களுக்குத் தமிழ் தெரியாது. ஊமைப் பாஷை மூலமேபெரும்பாலும் கருத்துப் பரிமாறல் இடம்பெற்றமை.

★ இறப்பு ஏற்படும் இடத்து அங்கிருந்து வடபகுதிக்கு உடலைக்கொண்டுவருவதில் பெரும் சிரமமும் பணவிரயமும் ஏற்பட்டமை.



இவ்வாறாகப் பல கஷ்ரங்களை அனுபவித்தஉடல்,உளவலிமை குன்றிய வட புலத்துப் புற்றுநோயாளர்களுக்குத் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள உள்ளக விடுதிப் பிரிவும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை யில் அமைந்துள்ள கதிர்வீச்சுப் பிரிவும் ஒரு பெரும் வரப்பிரசாதமாகும்.

உலகவங்கியின் தாராள நன்கொடையினால் இக் கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு அதே கட்டடத்தில் புத்துயிர் பெற்று, முதன்முறையாக 2005 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் திகதி புற்றுநோயாளர்கள் கதிர்வீச்சு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டமை ஒரு வரலாற்றுப் பதிவாகக்கொள்ளலாம்.



(படம் -A)

இன்று கதிர்வீச்சு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. இந்த ஒரு வருட காலப்பகுதியில் மொத்தம் 507 புதிய புற்றுநோயாளர்கள் கதிர்வீச்சு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். படம் -A மாதம் தோறும் சிகிச்சைக்குள்ளான புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் புற்றுநோய் வகைகளைக் காட்டுகின்றன.

கதிர் வீச்சு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி அடைந்த போதிலும் இவர்கள் இன்னமும் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்த சிகிச்சை நிலையம் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ளமையால் இந்த நோயாளர்கள் தினமும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து 30 கிலோ மீற்றர் தூரம் பயணத்தை மேற்கொள்ள வேண்டியும் இராணுவச் சோதனைக்கு உள்ளாக வேண்டியும் உள்ளது.


இது எல்லோரும் அறிந்த கசப்பான உண்மையே. அது மட்டுமல்ல அந்தச் சிகிச்சைப் பிரிவில் கதிர்வீச்சு சிகிச்சை தவிர வேறு வசதிகள் அல்லது சேவைகள் இல்லாததால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையினுள்ளே உள்ள தற்காலிக புற்றுநோய் பிரிவில் கூட இடவசதி இல்லை. சுகாதார விதிமுறைகள் எதுவும் அனுசரிக்கப்படாமல் இவர்கள் நெருக்கமாகத் தங்கி பல கஷ்ரங்களை அனுபவிக்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் நிவர்த்தி செய்யவேண்டுமாயின் முதல் கட்டமாக வசதிகளை அதிகரித்து இராணுவச் சோதனைகளை நிறுத்தி மக்களுக்கு ஆறுதல் அளித்தல் அவசியம்.

இரண்டாம் கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் பண்ணைப் பிரதேசத்தில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு புற்றுநோய் சிகிச்சைத் தொகுதி கட்டப்பட்டு பல்துறைசார் நிபுணத்துவச் சிகிச்சை மேற்கொள்ள எல்லோரும் அழுத்தம் கொடுத்து கனவு நனவாக முயற்சிப்போமாக. ★

**டாக்டர் ந. ஜெயகுமாரன்**
*புற்றுநோய் வைத்திய நிபுணர்*
*யாழ். போதனா வைத்தியசாலை*



# மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜூன்9

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 2006 -2007 காலத்திற்கான தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதி வழங்குவதற்கான தகுதிகாண் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

இப்பரீட்சை இம் மாதம் 18ஆம் திகதி மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

எஸ்.சிந்துஜா (கோண்டாவில் கிழக்கு), எஸ்.சதீஸ்வரன் (மட்டுவில் வடக்கு), கே.பிரசாந்தன் (சரசாலை வடக்கு), எஸ்.சாமினி (பருத்தித்துறை), என்.தனஞ்சயன் (இமயாணன் வடக்கு), எஸ்.சேந்தன் (கல்கிசை), மி.சதீஸ்குமார் (கோப்பாய் மத்தி), எஸ்.அகல்யா (விசுவமடு), எஸ்.ஜெனகன் (புலோலிமேற்கு), கே.கஜனி (கரணவாய் தெற்கு), சி.தனஞ்சினி (யாழ்ப்பாணம்), எ.ஐங்கரன் (வெள்ளவத்தை), எஸ்.சுதர்சினி (யாழ்ப்பாணம்),

ஜே.சுபாஸ்கர் (திருவையாறு),பி.காந்தரூபன் (வெள்ளவத்தை), கே.கபிலன் (கரணவாய் வடக்கு), எஸ்.சதீசன்(சரசாலை வடக்கு), கே.கார்த்திகா(தும்பளை), நி.கஜ ரூபன் (பண்டத்தரிப்பு), எஸ்.கஜிதா(இடைக்காடு), வி.விஜிகரன்(கொக்குவில் மேற்கு), ரி.வினிதா (கொட்டாஞ்சேனை), என்.சுரேஸ் (வரணி), யூ.ஐங்கரன் (சுண்டுக்குளி) வி.கோபினாத் (புலோலி தெற்கு), எல்.சாதனா (தாவடி), எஸ்.கோபிகா (வரணி வடக்கு), எஸ்.ஆர்.ஸ்ரீமகால் (கந்தர் மடம்).

ரி.தரோபன் (சுன்னாகம் மத்தி), ஜி.கோகிலரமணன் (வட்டுக்கோட்டை), மி.அஜந்தினி (வதிரி), ரி.மாகியா(சுன்னாகம்), எஸ்.கமலகரன்(கொழும்பு-11), எஸ்.பிரிந்தாபன்(கோண்டாவில்), எஸ்.காயத்திரி (புலோலி தெற்கு).

கே.கிரிவரணன் (சங்கத்தானை), எஸ்.கலாமோகன் (கொழும்பு), எஸ்.நவதர்சன் (கொக்குவில் கிழக்கு), ரி.தீனதயாளன் (நல்லூர்), மி.குமணன் (தும்பளை), எஸ்.கிருஷாந்தி (யாழ்ப்பாணம்), கே.சுகிர்தன் (மானிப்பாய்), கே.கமலகோபன் (துன்னாலை வடக்கு).

என்.கமல்ராஜ் (தெகிவளை), ரி.பிரதாபன் (இடைக்காடு), வி.சியாமல் (யாழ்ப்பாணம்), எம்.வசந்தரூபன் (நல்லூர் வடக்கு), ஆர்.அரவிந்தநாத் (நெல்லியடி), எஸ்.பார்த்தூரன் (யாழ்ப்பாணம்), எஸ்.கலைச்செல்வம் (வரணி), என்.லோகப்பிரதாப் (இணுவில் மேற்கு), ரி.அச்சுதன் (புலோலி மேற்கு), ஏ.ஹரிகேசன் (கோப்பாய் தெற்கு), எஸ்.வாகீசன் (நெல்லியடி), ஆர்.ரஜீந்தினி (சண்டிலிப்பாய்), ஜே.நல்லைநாதன் (கோப்பாய் வடக்கு), ரி.கிருபாதீரன் (கோப்பாய் மத்தி), வி.ஜனார்த்தனன் (தொல்புரம்), ஏ.பிரதீபன் (ஆனைப்பந்தி), வி.சயந்தினி (சுண்டுக்குளி), எஸ்.சபநாதன் (வட்டுக்கோட்டை தெற்கு), வி.சிவாஜினி (சங்கரத்தை), கே.கருணாமூர்த்தி (வவுனியா), வி.சபேதன் (யாழ்ப்பாணம்), பி.கோகிலா (கோண்டாவில் மேற்கு), எஸ்.கிறீஷன் (நுகெகொட), ஆர்.சஞ்சீவன் (கிருலப்பனை), எஸ்.ஐங்கரன் (உரும்பிராய் கிழக்கு), ஏ.றெவின் (மாட்டின் வீதி), எஸ்.ராகுலன் (திக்கம்), ஆர்.கௌதபிரசன்னா (கரணவாய் மத்தி), ஜே.சிவானந்தராசா (சங்கானை), என்.மனோகுமார் (கரணவாய் தெற்கு), என்.சஞ்சீவன் (வதிரி), எஸ்.சிவசுதன் (சுன்னாகம்).(ப-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து எடுத்துவர விதிக்கப்பட்ட தடையால் வீடமைப்பு நிர்மாணப் பணிகளில் முடக்கம்

புதுக்குடியிருப்பு, ஜூன்9

வன்னிக்கு சிமெந்து மற்றும் இரும்பு முதலிய கட்டடப் பொருள்கள் எடுத்துவருவதற்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த கட்டுமானப் பணிகள் யாவும் முடக்கமடைந்துள்ளன.

ஆழிப்பேரலையால் அழிவடைந்த மக்களின் வீடுகளை மீள அமைத்துக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தபோதிலும் ஒன்றரை வருடங்களாகியும் அந்த வேலைத்திட்டங்கள் பூர்த்தியடையாத நிலையிலேயே உள்ளன.

இந்த நிலையில் அரசு வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு கட்டடப்பொருள்களை எடுத்துச்செல்லத் தடை விதித்துள்ளது. இதனால் கட்டுமானப் பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் பெரும் இடர்களுக்கு மத்தியில் முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர்

தற்காலிக கொட்டில்கள் கூட மழை பெய்யும் காலங்களில் மழை ஒழுக்குக்கு உள்ளாகும் நிலையில் உள்ளன.

இவர்களின் நிலைமையக் கருத்தில் கொண்டு இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வரவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (353 - 341)

## கனகபுரம் அபிவிருத்தி குறித்து கூட்டம்

பரந்தன்,ஜூன்9

கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அண்மையில் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் போர்ப்பிரியன், துணைப் பொறுப்பாளர் சிறிநாத், கனகபுரம் ஜெயந்தி நகர் வலய சிறப்புப் பொறுப்பாளர் தர்சன், கனகபுரம் கிராம சேவை அலுவலர், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், மாதர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு, கிராம அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்களைக் கலந்துரையாடினர்.

தொடர்ந்து கிளிநொச்சி பிரதேச அரசி யல் துறைப் பொறுப்பாளர் போர்ப் பிரியன் தலைமையில் கிராமிய புனர்வாழ்வுக்குழு நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக எஸ்.சிவதாசனும், துணைத் தலைவராக தயாநந்தினியும், செயலாளராக நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். (352)

## பின்தங்கிய கிராமங்களில் மருத்துவசேவை

கிளிநொச்சி, ஜூன்9

தமிழீழ சுகாதார சேவையினரின் நடமாடும் மருத்துவ சேவையினரால் கடந்த மாதம் பின்தங்கிய கிராம மக்களுக்கென நடத்தப்பட்ட மருத்துவ சேவையின்போது 4ஆயிரத்து 458 வயதுவந்த நோயாளர்களும் 2 ஆயிரத்து 488 குழந்தைகளும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

## மீன்சந்தைக்குக் கட்டடம் இல்லை இலுப்பைக்கடவை கிராமத்தில் அவதி

பரந்தன்,ஜூன்9

மன்னார் இலுப்பைக்கடவை கிராமத்தில் மீன் சந்தைக்கான கட்டடம் எதுவும் இல்லாமையால் வியாபாரிகளும், மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சந்தைக் கட்டடம் எதுவும் இல்லாமையால் வியாபாரிகள் வீதியோரமாக வைத்து மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு, வீதிகளில் வைத்து மீன் வியாபாரம் செய்யும்போது சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றதென்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நிலை காரணமாக, மீன் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மழைகாலங்களில் கூட அவர்கள் வியாபாரம் செய்வதற்கு ஓர் இடம் இல்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தை கவனத்திலெடுத்து வியாபாரிகளினதும் மக்களதும் சிரமங்களைப் போக்க முன்வரவேண்டுமென்றும்-

வீதிகளில் வியாபாரம் செய்வதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டை தடுக்க முன்வரவேண்டுமென்றும் மக்கள் கேட்டுள்ளனர். (352)

## முன்பள்ளியின் விளையாட்டு

பரந்தன், ஜூன்9

முழங்காவில் அமல அன்னை சிறுவர் இல்லத்தில் முன்பள்ளிச் சிறார்களின் மெய வன்மைப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் டொன் பொஸ்கோ இயகுநர் அருட்தந்தை சாலமோன் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (352)

# 13 சுகாதாரத் தொண்டர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம்

புதுக்குடியிருப்பு, ஜூன்9

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் சேவையாற்றிவரும் 13 சுத்திகரிப்புச் சுகாதாரத் தொண்டர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையால் அமைய அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

கே.செல்வராணி (வவுனிக்குளம்), எஸ். மேரிஜெனிற்றா (அளம்பில்), எஸ். கவிதா (செவ்வபுரம் தெற்கு), எஸ். பிரியதர்சினி (யோகபுரம்), எஸ். ஸ்ரீவினஜலா (புதுக்குடியிருப்பு), ரி.செல்வராசா (கற்சிலைமடு), கே.பத்மநித்தியானந்தி (அம்பலவன் பொக்கணை), ஏ.ஜெயலலிதா (குமுழமுனை), எம்.உஸாநந்தினி (உணப்புலவு), எஸ்.கலைவாணி (முள்ளியவளை), பி.பரமேஸ்வரி (மாங்குளம்), ஆர்.யோகவதி (நெட்டாங்கண்டல்), கே.விஜையபாமா (சுற்றயல்கூறு மல்லாவி) -

இவர்கள் எவ்வித வேதனங்களும் இன்றி வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (353)

## சமகால அரசியல் கருத்தரங்கு

பரந்தன், ஜூன்9

தமிழீழ காவல்துறையினரால் வீதிப்போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கும் சமகால அரசியல் கருத்தரங்கும் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை, மாத்தளன் கிராம மக்களுக்கான கருத்தரங்கு மாத்தளன் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வீதிப்போக்குவரத்து நடைமுறைகள், சட்டஒழுங்குகள் போன்ற கருத்தரங்குகள் வழங்கப்பட்டதுடன் சமகால அரசியல் கருத்துரைகளும் வழங்கப்பட்டன. (352)

## உடுத்துறையில் மருத்துவசேவை

வட்டக்கச்சி, ஜூன்9

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பிரதேச மக்களுக்கான மருத்துவ சேவைகளை தமிழீழ சுகாதார சேவையினர் அண்மையில் வழங்கினர்.

உடுத்துறை 9 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் பொதுமருத்துவ சிகிச்சை, பற்சிகிச்சை, சுதேச மருத்துவ சிகிச்சை, கண்பரிசோதனை போன்றன நடத்தப்பட்டு மருந்துகளு[illegible], ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.இதில 160 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (405)


Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

External Degree
2007 பிரிவுக்கானது
(Jaffna University)
ஆரம்பம்: 17.06.2006 10 a.m.

CIMA
ஆரம்பம்: 17.06.2006 11.30 a.m.

aat (SriLanka)
Stage 1, Stage 11 & Stage 111
Medium- Tamil & English
ஆரம்பம்: 17.06.2006
9.00 a.m.

(சி.49550) (39-17-19)



Study in Singapore

வெளிநாட்டில் உயர்கல்வியை தொடரவதற்கு ஆர்வமா ?

- Foundation Course
- Diploma Course
- Higher Diploma Course
- Bachelor Degrees
- MBA

Course Contents:
- Software Engineering
- International Dip in Network Cyber Security
- Game & Animation
- Multimedia Hotel Management
- (On Job Raining 700 S$)
- Professional Accounting Programme (ACCA)

Degree (UK,Australia) ← Higher Diploma (HND) ← Diploma ← Foundation / A/Level; Foundation ← O/Level

AEC,FTMS
கல்லூரியின் யாழ் மாணவர்களுடன் கலந்துரையாடலாம். மாணவர்களின் நன்மை கருதி பெற்றோர்களும் கலந்துகொள்ளவும்.

SCHOOL ADDRESS:
182 Clemenceauavenue #03-00 Singapore 239923 Tel: +6567332888 Fax:+6563391060 Web: www.ftmsglobal.com
141 Market Street, #13-00 AEC Center, Singapore 048944. Tel: 0065 62211804 Web: www.aec.edu.sg

CONTACT US:-
Vaheeshan:- 0776242464
Vel:- 0776401040






ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
நம் ஆழ்வார் உற்சவம் 09-06-2006

நிகழும் விய வருடம் வைகாசி மாதம் 26ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.15 மணிக்கு நம் ஆழ்வார் உற்சவம் நடைபெறும். அடியார்கள் இந்த உற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மிவிலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

– ஆதீன மகாசபை.

(சி/49497)(32-19-14)





தேவி அம்மன் துணை
தொண்டைமானாறு கெருடாவில் பதி
ஸ்ரீ வீரகாளி அம்பாள் ஆலய
தேர்த்திருவிழா

அம்பாள் அடியார்களே!

நாளை (10.06.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். இவ்விழாவில் அம்பிகை அடியார்கள் வருகை தந்து அம்மனை தரிசித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

பிரதம குரு: கிரியா கலாமணி சிவஸ்ரீ க.நாகேஸ்வரக் குருக்கள் (எழுதுமட்டுவாழ்)

ஆதீன கர்த்தா -
சோதியம்மா லிங்கோற்பவநாதர்
தியாகராசா குருக்கள்
பொ.செல்வராசா அம்பாள் அடியார்.

(சி/49570)
(32-19-14)





உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

பூப்புனித நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விய வருடம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10.06.2006) சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஒரு மணிக்கும் இடையில் வரும் அனுஷம் நட்சத்திரமும் சித்தியோகமும் கூடியுள்ள சுபமுகூர்த்த வேளையில்




எமது ஏக புத்திரி
திருநிறைசெல்வி
நிவேஜா

அவர்களுக்கு இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் கல்யாண மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

" தங்கள் நல்வரவை இனிதே நாடும் "

30, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.: 0773269481. (50610) (39-32-19-14)

திரு.திருமதி தருமராசா
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உளநோயாளர் சிகிச்சைப்பிரிவுக்கு கட்டடம்

## ஆறுகோடி ரூபா செலவில் அமையும்

கரவெட்டி,ஜூன்9

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை உளநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு 6 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது என யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை உளநோயாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வைத்தியசாலையில் உளநோயாளர் பிரிவு 107 வருடங்கள் பழமை வாய்ந்த சிறிய கட்டடத்திலே இயங்கிவருகிறது. போதிய வசதி, வாய்ப்புகள் இன்றி பெரும் சிரமத்துடன் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளர்கள் சிரமமின்றி வைத்திய வசதிகள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கில், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை எடுத்த முயற்சியின் பயனாக 'நிகொட்' நிறுவனம் நவீன வசதிகள் கொண்ட இருமாடிக்கட்டடம் அமைப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அத்துடன், உளநோயாளர் ஆற்றுப்படுத்தல் பிரிவுக்கு லயன்ஸ் கழகம் 5 லட்சம் ரூபா நிதியை வழங்கவுள்ளது.

இதனைக் கொண்டு உள நோயாளர் சிகிச்சைக் கட்டடம் நவீன வசதிகள் கொண்டதாக அமைக்கப்படும். இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் விரைவில் தொடங்கும்.

உளநோயாளர்கள், சமூகத்துக்கு உதவ மாட்டார்கள் என்ற கருத்தை இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருள்கள் பொய்ப்பித்துள்ளன. அவர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரம் வழங்கவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (70-204)

## சமயசந்நிதிகளில்

நயினாதீவு, தில்லைவெளி பிடாரி அம்மன் ஆலய திருக்குளிர்த்திப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகப்பானை வைத்தலுடன் ஆரம்பமாகும். அன்றையதினம் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (111)

* * *

பொலிகண்டி தியலம்பற்றை வீரகத்தி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் விநாயகர் வழிபாடு, பூர்வாங்க கிரியைகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து யாகாரம்பமும் திருமுறைப் பாராயணமும் இடம்பெறும்.

# உளநோயாளரின் உற்பத்திக் கண்காட்சி பருத்தித்துறையில் சிறப்புற நடந்தேறியது

கரவெட்டி,ஜூன்9

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஊழியர்களின் ஊக்குவிப்பால் வெளிக்கொணரப்பட்ட உளநோயாளர்களின் உற்பத்திப்பொருள் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலை உளநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிறப்பாக நடைபெற்றது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ். பிராந்திய உள வைத்திய நிபுணர் டாக்டர் சா.சிவயோகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

கண்காட்சியில் உளநோயாளர்களால் உற்பத்திசெய்யப்பட்ட ஓவியங்கள், தையல் வேலைப்பாடுகள், அலங்கார ஆடைகள், பனம்பொருள் உற்பத்திகளான பெட்டி, பாய், பனங்கட்டிக்குட்டான் என்பனவும், பூங்கன்று உற்பத்தி போன்றனவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதனை வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி நோயாளர்கள், பொதுமக்கள் உட்படப் பெருமளவானோர் பார்வையிட்டதுடன், பொருள்களைக் கொள்வனவு செய்வதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். (70)

# பேக்கரிகளில் இரவு நேரத்தில் திடீர் சோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பேக்கரிகள் மீது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இரவு வேளைகளில் திடீர் பரிசோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவி க்கப்பட்டது.

யாழ்.மாநகரசபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தலைமையிலான பரிசோதகர் குழுவினர் பேக்கரிகளில் உள்ள சுத்தம்,சுகாதாரம் போன்ற செயற்பாடுகள் குறித்து பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் - எனவும் -

இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் -மாநகர சபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (204)

# எமது துன்பத்திற்கு காரணம் நாம் பேசும் வார்த்தைகளே

'யாவர்க்குமாம் பிறர்க்கொரு மென்னுரை தானே' என்றார் திருமூலர். பேச்சு என்பது மனித சாதிக்கே உரிய தனிச்சொத்து. பேச்சின் மூலம் நமது கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதுடன், அவர்களை நம்பால் ஈர்க்கவும் செய்கின்றோம். எனவே, பேசும்போது அன்போடும் பண்போடும் பேசவேண்டும்.

தெரிந்தவர்களிடம் தேவையான அளவு பேசவேண்டும். தெரியாதவர்களிடம் பேசுவதைக் குறைத்து அவர்கள் பேசுவதைக் கேட்கவேண்டும். அறிஞர்களிடம் அளவோடு பேசவேண்டும். உறவினர்களிடம் பரிவோடு பேசவேண்டும். நண்பர்களுடன் நயமாகப் பேசவேண்டும், அறியாத மூடர்களிடம் பேசவே கூடாது.

ஆண், பெண், ஏழை, செல்வந்தன் கல்வியறிவு பெற்றவன், கல்லாதவன் என்று எந்தவித பாகுபாடுமின்றி எல்லோராலும் இயலக்கூடியது தான் இனிமையாகப் பேசுதல் மென்மையாகப் பேசுதலாகும். இனிய சொற்கள் இருக்க இன்னாது சொற்களைக் கூறுதல் கனி இருக்கக் காய் கவர்தலைப் போலாகும் என்றார் வள்ளுவர்.

**ஞானக்கதிர்**

நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துவரும் துன்பத்திற்கும் மனக்கஷ்டத்திற்கும் முக்கிய காரணமாக இருப்பது நாம் உபயோகித்துவரும் வன்சொற்களும் சுடு சொற்களும்தான். பேசிய வார்த்தைக்கு நீ அடிமை. பேசாத வார்த்தைகள் எனக்கடிமை என்றனர் ஆன்றோர். இதனைத்தான் வில்லம்பு பட்ட புண் வேதனை தராது. ஆனால், சொல்லம்புபட்ட துன்பம் ஆறாது எனக் கூறப்படுகின்றது. மென்மையான, கனிவான வார்த்தைகளால் கொடியவர்களின் வாழ்க்கையிலும் கூட ஒரு திருப்பத்தை ஏற்படுத்த முடியும். நம்பிக்கை ஒளியை அளிக்க இயலும்.

அதிகமாகப் பேசுபவர்களும் சத்தமாகப் பேசுபவர்களும் தமது தாழ்வு மனப்பான்மையை மறைக்க அவ்வாறு செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது. பண்பாடும் சிந்திக்கும் திறனும் வளரவளர பேச்சின் சத்தம் குறைந்து கொண்டே போகும். தெளிவாக, அளவாக, மற்றவர் எண்ணங்களை பிரதிபலித்து அனைவருக்கும் புரியும்வண்ணம் பேசுவதே நன்றாகப் பேசுவதாகும். வலிந்து சென்று பேசுதல், பெருமைகளையே கூறுதல், தெரிந்தவற்றையே கூறிக்கொள்ளல், விமர்சனம் செய்தல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டால் அது உங்கள் மதிப்பை மற்றவர் மனதில் உயர்த்திவிடும்.

**பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

# நீர்வேலியில் பஞ்சதள கோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்9

நீர்வேலி கந்தசுவாமி ஆலய பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.20 மணிமுதல் 7.22 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.



இன்று அதிகாலை 4.30 மணிக்கு மூல மூர்த்திக்கு விஷேட அபிஷேகம், பூஜை, புண்ணியாவாசனம், யாகபூஜை, மஹா பூர்ணா குதி, விசேட பூஜை, வேதபாராயணம், தோத்திரபாராயணம், கும்ப உத்தாபனம் என்பன இடம்பெற்று மகாகும்பம் மங்கள வாத்தியங்களுடன் வீதியுலாவரும்.

தொடர்ந்து 6.20 தொடக்கம் 7.22 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

கிரியாகாலநிகழ்வுகளிடையே சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணியளவில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர வாயில் ஊடாக சண்முகப்பெருமான் எழுந்தருளி அருள் பாலிப்பார். (72)

# மாகாணமட்ட விளையாட்டுவிழா மாத இறுதியில் வவுனியாவில்

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

**போட்டி அட்டவணை**

| தினம் | போட்டி |
|---|---|
| ஜூன் 30 | உடற்பயிற்சி (ஆண், பெண்) |
| ஜூலை 1,2 | எல்லே (பெண்)<br>பட்மின்ரன் (ஆண், பெண்)<br>மேசைப்பந்து (ஆண், பெண்)<br>சதுரங்கம் (ஆண், பெண்)<br>கூடைப்பந்து (ஆண், பெண்) |
| ஜூலை 3, 4 | கரபந்து (பெண்) |
| ஜூலை 6 | கப்டி (பெண்) |
| ஜூலை 7, 8, 9 | மெய்வன்மைப்போட்டி (பெண்) |
| ஜூலை 11, 12 | வலைப்பந்து (பெண்) |
| ஜூலை 13, 14 | மென்பந்து கிரிக்கெட் (ஆண்) |
| ஜூலை 15, 16 | கரபந்து (ஆண்) |
| ஜூலை 16, 17 | எல்லே (ஆண்) |
| ஜூலை 17 | கபடி (ஆண்) |
| ஜூலை 18, 19 | கால்பந்து (ஆண்) |
| ஜூலை 21, 22, 23 | மெய்வன்மைப்போட்டி |

மாகாணத்தின் 8 மாவட்டங்களிலும் மாவட்ட மட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்று முடிவடைந்தன.

இப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் மாகாண மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்டத்திலும் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் அணிகள் மாகாணப் போட்டிகளில் பங்குபற்றத் தயாராகுமாறு யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார்.

## இறுதியாட்டம்

யாழ். மத்திய விளையாட்டுக் கழகம் வி.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட - கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (190)



வி.பி. கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கிரிக்கெட் அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் வி.க., பற்றீஸியன் வி.க மோதியக்கொள்ளும் காட்சியொன்று...
(படம்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

981/10, வளன்புரம், கொழும்புத்துறையில் (குழந்தை இயேசு சுருவத்திற்கு முன்னால்) காணியுடன் கூடிய சுற்று மதில் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்ணன். T.P.: 0777 238505 (50993)

### வான் விற்பனை

ரொயாடோ Super GL JC - XXXX தொடர் இலக்க டபிள் A/C வான் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 286052, 0777 261076 (50988)

### காணி தேவை

இளம் தென்னங்கன்றுகளுடன் கூடிய அல்லது தென்னை பயிர்செய்கைக்கு உகந்த காணி, பகுதி பகுதியாகினும் பரவாயில்லை. 300 ஏக்கர் தேவை. தொடர்பு: S.R.குமார், T.P.: 0785300484 (சி/49544)

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு 300m தூரத்தில் 3 அறை கொண்ட வீடொன்று வாடகைக்கு உண்டு. Water Tank, attached bath என்பன உண்டு. தொடர்பு: T.P.: 021 222 3950, 0714246310 (50973)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, பிரான்சில் நிரந்தர வதியுடமையுள்ள 8இல் செவ்வாய், உத்தரட்டாதி, முதலாம் பாதம் உள்ள, 1975, உயர் வெள்ளை மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. மொத்த பாவம் 68. தொடர்பு: 077 6184386 (50898)

### தவறிவிட்டது

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறைச் சேர்ந்த பரமேஸ்வரன் லயந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (841763114V) தொண்டைமானாறுக்கும் வல்லைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். 0779793356 (50968)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திலிருந்து அளவெட்டிக்குச் செல்லும் பஸ்ஸில் சிறுபிள்ளையின் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு சிற்றூர்திச் சங்கம் (768), அளவெட்டி என்னும் காரியாலயத்தில் உள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (50975)

### பாதுகாவலர் தேவை

பிரபல கட்டடப் பொருள் விற்பனை நிலையத்தின் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள களஞ்சியப் பகுதிக்கு 35 வயதுக்கு மேற்பட்ட படித்த ஆண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
55, 57 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(50836) (32-19-14)

### House On Rent

Close to Kokuvil Hindu College. 4th House from K.K.S. Road, 5 rooms, 2 Large Halls, + 1 Centre Hall, 2 Kitchens, 2 attached bath Rooms + 1 Outside, Entry & Exit Gates, Plenty of Parking areas with a lot of produce. Ideal for NGOs, Corporation, Offices, Medical Centre Agency Houses, Stores and Family Residences.

Tel: 077 6326345
011 2715028 (C/49596)

## போயா ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை போயா ஆன்மீக நிகழ்வுகள் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறவுள்ளன. (12)

## கணனி அன்பளிப்பு

குருநகர்,ஜூன்9

சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் புதிய கணனிகள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (51)

## பாராட்டி வாழ்த்து



'இசைஞான கலாநிதி'
'கான இசைமணி'
நாதஸ்வர வித்துவான்
**V.K.கானமூர்த்தி**
அவர்களுக்கு 22-05-2006 அன்று கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் 'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல விருதுகள் பெற இறைவனை வேண்டுகிறோம்.

கோண்டாவில் மேற்கு
மகா கணபதிப் பிள்ளையார் கோயில்
(காளிகோயில்).
(50835)(32-19-14)

வாழ்த்துவோர்:
ஆலய பரிபாலன சபையும்,
கோண்டாவில் வாழ் மக்களும்.

## ஓராண்டு நிறைவு தின அழைப்பு



அமரர்
**வைத்திலிங்கம் இராஜேஸ்வரன்**
(அப்புச்சாமி)

அவர்களின் ஓராண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (09.06.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(50992)(32-19-14)

திருமதி கமலேஸ்வரி (சுந்தரி)
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
13 . 09 . 1969



காலனவன் சதியில்
26 . 04 . 2006

**அமரர் தங்கராசா கமலலோஜன் (கமல்)**
(கொக்குவில் தொ.நு.க. பாதுகாப்பு ஊழியர்)

அன்பால் ஆதரித்து ஆசையால் அரவணைத்து
இணைபிரியா வாழ்ந்த எம்மீது
காலனவன் கண் வைத்தானோ? உங்கள்
அழகு முகம் காணாதும்
இன்சொல் கேட்காதும்
நாளும் பொழுதெல்லாம்
ஏங்கிப்பரிதவிக்கின்றோம்
சீக்கிரமே இப்பிறவியில்
எம்முடன் வந்து சேருமையா!

இல.115, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(50997)(32-19-14)

உங்கள் பிரிவால் துயருறும்:
பாசமிகு மனைவி மற்றும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10-05-2006 அன்று
இறைவனடி சேர்ந்த
எங்கள் சகோதரி, மைத்துனி
செல்வி
**தையல்நாயகம் சின்னத்தம்பி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07-06-2006இல் நடைபெற்றது. சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (09-06-2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(50989)(32-19-14)

சகோதரி - பங்கயம்
மைத்துனன் - சித்தானந்தன்.

## பிறந்த நாள் நினைவு அஞ்சலி



**அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்**
உங்களோடு வாழ்ந்த காலத்தின்
பசுமையான நினைவுகளோடு
இந்த பிறந்தநாளில் உங்களை அஞ்சலிக்கின்றோம்.

566/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (50991)(32-19-14)

குடும்பத்தினர்.




சீட்டிழுப்பு இல. 1716

07.06.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

16 23 42 61 01

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201207020 இலிருந்து 201222684
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,09,70,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,09,70,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 35 | 5,000/- | 1,75,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 411 | 1,000/- | 4,11,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,327 | 500/- | 6,63,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,378 | 40/- | 8,15,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,201 | 20/- | 3,84,020/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,89,783 | 10/- | 28,97,830/- |
| மொத்தம் | | | 73,46,470/- |
| [illegible] | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| [illegible] | 3,31,142 | | 79,46,470/- |

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,17,44,000/-

| | |
|---|---|
| [illegible] | 201218453-1-43 |
| [illegible] | 201220453-2-48 |
| [illegible] | 201213700-3-57 |
| [illegible] | 201210968-0-64 |
| [illegible] | 201219448-4-32 |


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா சபாரத்தினம்

(வறுத்தலைவிளான், தெல்லிப்பழை)

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சாமியன் அரசடி, கொடிகாமம் வீதி, கரவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சபாரத்தினம் அவர்கள் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர் நாகநாதர் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் செல்வி ஜெயசதினதேவி சபாரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/யூனியன் கல்லூரி-தெல்லிப்பழை, வருகை விரிவுரையாளர், யா/தொழிநுட்பக் கல்லூரி திறந்த பல்கலைக்கழகம்), ச.விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட போதனாசிரியர்- யாழ். பல்கலைக்கழகம்), செல்வி விக்கினேஸ்வரி சபாரத்தினம் (ஓய்வு பெற்ற கணக்குப் பதிவாளர், யாழ்.வலயக் கல்வி அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராணியின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (08.06.2006) வியாழக்கிழமை சாமியன் அரசடியில் நடைபெற்றது. இந்தத் தகவலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(50992)(32-19-14)

தகவல்:
ச. விநாயகமூர்த்தி.

## திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 07.06.2006 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் உதயகுமார் (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), சத்தியகுமாரி (லண்டன்), ரவிகுமாரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் குமாரசாமி (பென்சனியர்), காலஞ்சென்ற சிவபாக்கியம், செல்லம்மா, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டனில் 11.06.2006 அன்று நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லண்டன்
0044 2089981887
(50999)(32-19-14)

தகவல்: இ.குமாரசாமி,
39, புதுச்செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவந்திருக்கிறது

**பூங்கனி** சிறுவர் மாத இதழ்



நாடுமுழுவதும் பரபரப்பான விற்பனையில்

## 5 ஆம் ஆண்டு பிரிவின் நிறைவில்

பிறப்பு 13 - 01 - 1938



இறப்பு 09 - 06 - 2001

அமரர்

### ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்-G.S.பிள்ளை)

மலையின் சிகரம் மண் வீழ்ந்து ஐந்தாண்டு
மகனின் வாழ்வு விண்நோக்கி ஐந்தாண்டு
மனையாள் கண்ணீர் வடித்து இன்று ஐந்தாண்டு
வலையில் வீழ்ந்த மீனாகி நாம் ஐந்தாண்டு-அப்பா!
நிலையான இடம் போய் இன்று ஐந்தாண்டு
கல்லின் சிற்பம் எப்படி அழிந்திடும் அப்பா-உம்
கண்ணின் கருவிழி எப்படி மறப்போம் அப்பா!
நெல்லின் மணியாகி சாய்ந்தீர் எம்மடியில்
நேசக் கரமிழந்து நெருடுது எம்மனமே- அப்பா!
உம் சமூக பணியின் தடங்கள் உந்தன் பெயர் சொல்ல
உம் சத்திய நோக்கும் சளைத்திடா உழைப்பும் உந்தன் பெயர் சொல்ல
பக்தியின் பண்பும் பாசத்தின் வாசமும் உந்தன் பெயர் சொல்ல-நீர்
ஜீசஸ் பிள்ளையாகினீரோ!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (09.06.2006) வெள்ளிக்கிழமை காலைமேணிக்கு வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்திலும் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

-பிரிவால் துயருறும்:
மனைவி,பிள்ளைகள்,
மருமகன்,மைத்துனர்,உறவினர்கள்,
அருட்திரு.எஸ்.ஏ.றொஷான்.

54,2/1,இராஜசிங்க வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6

(50998)(26.11.15)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ஜெயதேவி சுஜிதன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சரஸ்வதி பஞ்சாட்சரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(51002) -இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்9

இந்த ஆண்டுக்கான உள்ளக பெருவிளையாட்டுக்கள் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல்10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்ற பாடசாலை அணிகளின் பொறுப்பாசிரியர்களைத் கலந்து கொள்ளுமாறு அவர்கேட்டுள்ளார்.

பொறுப்பாசிரியர்கள் அணிகளின் பெயர் விவரங்களைத் தம்முடன் எடுத்து வருமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (12)

## அரச ஊழியர்களுக்கு சிங்களப் பயிற்சி

கைதடி,ஜூன்9

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் அரச ஊழியர்களுக்கான அடிப்படைச் சிங்கள மொழிப்பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இந்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் சிங்களப் பயிற்சி நெறி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர்பூர்த்திசெய்யப்படவுள்ளது.

எனவே, சனி, ஞாயிறு தினங்களுடன் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை மேலதிக வகுப்பு நடத்தப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (75-202)

## குடும்பத் தகராறு; இருவர் காயம்

இரு குடும்பத்தினருக்கிடையே இடம் பெற்ற மோதலில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் பாலாவியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் 16 வயதுச் சிறுவன் கையில் வெட்டுக் காயத் துடனும், 46 வயதுக் குடும்பஸ்த் தர் காயமடைந்த நிலையிலும் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர்.

காணித் தகராரே இம் மோதலுக்குக் காரணம் என்று தெரி விக்கப்பட்டது. (117)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜாக்சனின்

கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

(சி-49188) காட்சி நேரம் : 10.30, 2.30

ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

பட்டியல்

(சி-47139) புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## மினிபஸ்ஸிலிருந்து வீழ்ந்த மூதாட்டி உயிரிழப்பு!

மினிபஸ்ஸில் ஏறியபோது தவறி விழ்ந்த வயோதிபப் பெண் உயிரிழந்தார்.

சாவகச்சேரியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த பி.தங்கமுத்து (வயது -72) என்ற வயோதிபப் பெண்ணே இறந்தவராவார்.

படுகாயமடைந்த இவர்சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.அங்கு அவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு அவர் மரணமடைந்தார்.

சடலம் மரண விசாரணையின் நிமித்தம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (15)

## மூன்று நிலையங்களில் கணனிப் பயிற்சிநெறி

'கட்றப்' திட்டத்தின் கீழ் அரச அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய ஆணையாளர்அறிவித்துள்ளார்.பயிற்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 28ஆம் திகதிவரை சனி, ஞாயிறு தவிர்ந்த கடமைநாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும்.

எஸ்.ரி.பி., ஐ.ஐ.எஸ், ஐ.ரி.பார்க் ஆகிய கணனிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. (75-202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் காண்டப அழைப்பும்



அமரர் இராசையா செல்லம்மா

*தோற்றம் : 15.08.1929*
*மறைவு : 10.05.2006*

*அன்பாய் அரவணைத்து*
*பண்பாய் வளர்த்தீர்கள்*
*என்றும் உங்கள் நினைவில்*
*வாழ்ந்திடுவோம்.*

இன்று (09.06.2006) வெள்ளிக்கிழமை நண்பகல்12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இல.92, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(51005)
(18-16-49-12)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### S.A. திருச்செல்வம்(ஆசிரியர்)



பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை அலெக்சாண்டர் திருச்செல்வம் (முன்னாள் ஆசிரியர், சென் ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை, யா/ இந்துக் கல்லூரி, சென் சேவியர் கல்லூரி-மன்னார், பிரதி அதிபர் வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம்) அவர்கள் 08-06-2006 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அலெக்சாண்டர் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் திருமதி பாராளும் சக்தியின் (ஆசிரியர், செட்டிக்குளம் மகாவித்தியாலயம், மெய்கண்டான் வித்தியாலயம், இளவாலை) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவிலில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் 'இளவாலையம்பதி' இளவாலையில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*வ.செல்வரட்ணம்*
*குளம்கரை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.கொக்குவில்.*
*0773055098,*
*0776232021*

தகவல்:
திருமதி பாராளும்சக்தி
திருச்செல்வம்(மனைவி)
(ஆசிரியர்)

(51008)
(18-16-49-12)

### விஸ்வலிங்கம் பரணீதரன்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பரணீதரன் அவர்கள் அகாலமரணமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் (இளைப்பாறிய அதிபர், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி) - இராசலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரனும் திருமதி மலைமங்கை (உபஅதிபர் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கைலைமகான் (ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியர் வலிகாமம் வலயம்), குமாரவேலு (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்), குணரத்தினம் (ப.நோ.கூ. சங்கம் வவுனிக்குளம்), தட்சணாமூர்த்தி (புத்தூர்), காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்பு பெறாமகனும் திருமதி தங்கம்மா மற்றும் காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் கிழக்கு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

(51007)
(18-16-49-12)

தகவல்:
சோ.விஸ்வலிங்கம்
(தந்தை).

### சிவசுப்பிரமணியம் சிவமனோகரன்

(Accountant,U.K.)

காலஞ்சென்றV. சிவசுப்பிரமணியம் (அதிபர்,ஸ்கந்தவரோதயக் கல்லூரி,சுன்னாகம்),காலஞ்சென்ற சிரோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் தேவகி(U.K) இன் அன்புக் கணவரும் கஜமோகனா(Kingston University,-u.k),கஜகரன்(U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாந்தனின்(கனடா) பாசமிகு மாமனாரும் ஆகிய சிவமனோகரன் அவர்கள் 06.06.2006 லண்டனில் காலமானார்.

அன்னார்Dr.சிவானந்தராஜா(The medical Centre, Colombo),சிவஞானசுந்தரம்(ஓய்வுபெற்ற முகாமையாளர் இலங்கை வங்கி), Dr.சிவபாலன்,Eng. சிவதாசன், சிவலோசனாதேவி,காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி,காலஞ்சென்ற சிவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னம்மாவின் மருமகனும் மணிமேகலை,காலஞ்சென்ற இராஜசிங்கம்,ஆனந்தி, சுபேந்திராதேவி, யோகேஸ்வரி,கமலாதேவி, அம்புஜம்,பவானி,தவராஜா(நில அளவையாளர் -கட்டார்),கருணா(U.K),ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் எதிர்வரும் 11.06.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.S.சிவானந்தராஜா
கொழும்பு.
T.P.: 0112502041,
0112731438.

(சி-49607)
(18-16-49-12)

தகவல்:
Dr.S.சிவபாலன்,
சுன்னாகம்.
0602212441

## A/L 2008 கலை, வர்த்தகப் பிரிவுகள்

பிரசித்தி பெற்ற மூன்று நிறுவனங்களிலும்

புதியபிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன

*யாழ். மண்ணில் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்*

| A/L 2008 | பொருளியற் கல்லூரி | | BRATHY |
|---|---|---|---|
| இடம் | யாழ்நகரில் | இணுவில் | சித்தன்கேணி |
| பொருளியல் | வரதராஜன் | சுதாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா | R.P.சர்மா |
| தமிழ் | மீரா | பாலா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஷ் | சுரேஷ் |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் | பத்மன் |
| நாடக.அரங்கி. | சுகந்தன் | சுதன் | சுதன் |
| அரசியல் | ரஜீவன் | சுகாஷ் | சுகாஷ் |
| சித்திரம் | செந்தில்நாதன் | செந்தில்நாதன் | செந்தில்நாதன் |
| ஆங்கிலம் | இராஜகுலசூரியர் | இராஜகுலசூரியர் | இராஜகுலசூரியர் |

குறிப்பு: மூன்று இடங்களிலும் சகல பாடங்களும் ஆரம்பமாகி நடைபெறுவதால் இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் தாமதியாது இப் புதிய பிரிவுக்கு உங்கள் அனுமதியினை நாளையில் இருந்து பெற்றுக்கொள்ளவும். (51009)(18-16-49-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பார்கள் எனக் கருதினோம். அரசுத் தரப்புடன் ஒரே மேசையில் அமர்ந்து பேச புலிகள் தரப்பு மறுத்துள்ளமை கவலை அளிக்கிறது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளான சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இடம்பெறக்கூடாதென்று விடுதலைப் புலிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த முடிவுகளை மீள்பரிசீலனை செய்யுமாறு அவர்களிடம் கோரியுள்ளோம். அவர்களின் இத்தகைய இறுக்கமான போக்குக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை காரணமாக இருக்கலாம். குறிப்பிட்ட மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்களை விலக்கினால் இருபது பேருடன் கண்காணிப்புக்குழு செயற்பட நேரிடும். இல்லாவிட்டால் வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் அதற்கு ஆறு மாத காலமாகும். அதுவரை குறிப்பிட்ட மூன்று நாடுகளினதும் பிரதிநிதிகளும் கண்காணிப்புக் குழுவில் தொடர்ந்து செயற்பட வேண்டியிருக்கும்.

கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் நோர்வேயின் தலைமையிலேயே செயற்படுகிறார்கள். எந்த நாட்டவராக இருந்தாலும் ஐ.நாவின் கீழ் பணியாற்றுபவர்கள் ஐ.நா.பணியாளர்களாகக் கருதப்படுவது போலவே இதனைக் கருத வேண்டும்.

ஜெனீவாப் பேச்சில் இணக்கங்காணப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும். விடுதலைப் புலிகளும் வன்முறைகளைக் கைவிடவேண்டும்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நாளை (இன்று) விடுதலைப் புலிகளுடன் பேசவுள்ளார். புலிகளின் கடற் போக்குவரத்துக் குறித்து அப்போது ஆராயப்படும். விடுதலைப் புலிகளின் போக்குவரத்து விடயம் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னரே பிரச்சினைக்குரிய விவகாரமாகியுள்ளது.

மீண்டும் யுத்தம் உடனடியாக ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகக் கருதவில்லை. இரு தரப்புகளும் சிறிய அர்த்தமற்ற விடயங்களை பெரிதுபடுத்தாமல் சமாதான முயற்சிகளில் ஒத்துழைக்கும் படி கேட்டுள்ளோம். -என்று சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், விதார் ஹெல்கிஸன் ஆகியோர் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் நெடுநேரம் பேச்சு நடத்தினர். புலிகளை நேரடிப் பேச்சுக்கு சம்மதிக்க வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இதன்போது பயனளிக்கவில்லை.

இதனையடுத்து, புலிகளின் இந்த நிலைப்பாட்டை நோர்வே அனுசரணையாளர்கள் அரச பிரதிநிதிகளுக்கு அறிவித்தனர். அரசுக்கும் அறிவிக்கப்பட்டது. தமது முடிவில் மாற்றமில்லையெனப் புலிகள் உறுதியாக அறிவித்ததையடுத்து நேற்றைய முதல்நாள் கலந்துரையாடல் இடம்பெறவில்லை. இதனால், அ சரணையாளர்கள் நேற்று மதியம்வரை பு களுடன் பேச்சு எதனையும் நடத்தவில்லை. அவர்கள் அரச குழுவுடன் பேச்சுகளை நடத்திக் கொண்டிருந்தனர்.

இலங்கை நேரப்படி நேற்றிரவு 10 மணியளவில் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினருக்கும் நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்முக்குமிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவிருந்தது.

இரவு 12 மணிக்கு ஒஸ்லோச் சந்திப்பில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் குறித்து எரிக்சொல்ஹெய்ம் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தவிருந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்ச்செல்வனும் பத்திரிகையாளர்களைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளான சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகள் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கக்கூடாது என்பதில் புலிகள் கடும் போக்கில் இருந்தனர் என்று தெரியவந்தது.

இதேவேளை, தற்போது ஒஸ்லோவில் தங்கியுள்ள புலிகளின் அரசமைப்பு விவகார ஆலோசனைக்குழுவின் முக்கியஸ்தர்களான முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி சட்ட அறிஞர் போல் டொமினிக், பேராசிரியர் இராமசாமி ஆகியோருடன் நேற்று தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு விரிவான பேச்சுகளை நடத்தியது.

ஒஸ்லோவிலிருந்து 67 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜவனேகர் என்னுமிடத்திலுள்ள தூர்பியோன்ருட் என்ற ஹோட்டலில் அரச மற்றும் புலிகளின் முக்கியஸ்தர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## அக்கராயனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் கிளிநொச்சியைச் சேர்ந்த சசிகலா (வயது 22) என்பவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். (12,15,291)

## படைமுகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லரணில் கடமையாற்றிய இரண்டு படையினர் காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி இராணுவத்தினரும் பதிலுக்கு மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர் இந்தச் சம்பவத்தையடுத்து நேற்றுக்காலையில் அப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் 27 பேரை சந்தேகதின் பேரில் கைது செய்தனர்.

இதேவேளை, வாழைச்சேனைப் பொலிஸ் நிலைய காவலரண் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பொலிஸார் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

பொலிஸார் பதில் தாக்குதலை மேற்கொண்டதால் வாழைச்சேனைப் பிரதேசத்தில் அதிகாலை வேளையில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து, காலை வேளையில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

(க)

# 'வற்' வரி மோசடி செய்தோருக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்குக

## சபையில் வீரவன்ஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 9

பெறுமதி சேர் வரி மோசடியில் ஈடுபட்டவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இந்த மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். இதற்கு தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவையாக இல்லாவிட்டால் புதிய சட்டங்களையாவது அரசு கொண்டுவர வேண்டும்.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இப்புதிய வரி மோசடியில் தொடர்புடையவர்களெ சந்தேகிக்கப்படும் சிலர் கைது செய்யப்பட்டிருந்தாலும் இது தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய பல முக்கிய அதிகாரிகள் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றனர்.

வற் வரி மோசடி தொடர்பாகத் தெரியவந்ததும் அது நாம் நினைத்ததைவிட மிகப் பாரிய மோசடியென்பது கணக்காய்வாளர் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெளிவாகிறது.

வரி மூலமே அரசுக்கு பெருந்தொகை வருமானம் கிடைக்கின்றது. 2002, 2003ஆம் ஆண்டுகளில் மொத்த அரச வருமானத்தில் 84 சதவீதம் வரி மூலமே கிடைத்துள்ளது. 2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் இது 90 சதவீதமாக அதிகரித்துள்ளன. இவ்வரியில் 42 சதவீதம் 'வற்' வரி மூலமே பெறப்படுகின்றது.

'வற்' வரியைச் செலுத்தவேண்டிய நிறுவனங்களிடம் வரியை அறவிடாமல் அவர்களுக்கு மீளச் செலுத்தவேண்டிய 101 கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

ஏழு நிறுவனங்கள் 80 கோடி ரூபாவை வற்வரியாக செலுத்த வேண்டியுள்ள நிலையில் அந்த ஏழு நிறுவனங்களுக்கும் காசோலைகள், வவுச்சர்கள் மூலம் 22 கோடி ரூபா மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

'வற்' வரி மோசடி தொடர்பாக விரிவாக இச்சபையில் விவாதிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். - என்று கூறினார் விமல் வீரவன்ஸ எம்.பி.

## உடுப்பிட்டியில் நேற்றிரவு மோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்9

உடுப்பிட்டிச் சந்தியில் நேற்றிரவு 7.55 மணியளவில் படையினருக்கும், ஆயுததாரிகளுக்குமிடையே துப்பாக்கி மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தின் விளைவுகள் குறித்து தகவல்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

## பேச்சுக்குழுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் இது விடயத்தில் இறங்கிப் போகக்கூடாதென்றும் அரச உயர்மட்டம் நோர்வேயிலுள்ள அரச குழுவுக்குப் பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அறிய வந்தது.

இதேவேளை, ஒஸ்லோவில் நேற்று நடைபெறவிருந்த பேச்சுகளுக்காக வந்துவிட்டு கடைசி நேரத்தில் நேரடிப் பேச்சில் கலந்து கொள்ளப் போவதில்லையென்று புலிகள் அறிவித்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசு நேற்று மாலை விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக்கான பின்னணி குறித்து தெரிந்து கொண்ட பின்னரும் புலிகள் இப்படிச் செய்தமை நோர்வே அனுசரணையாளர்களுக்கும் பெரும் ஆச்சரியத்தைத் தந்துள்ளது. கண்காணிப்புக் குழுவின் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளின் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது தொடர்பிலும் புலிகள் ஆட்சேபனை தெரிவித்ததாக நோர்வே அனுசரணையாளர்கள் அரசுக்கு அறிவித்திருக்கின்றனர்.

தூதரக அந்தஸ்து உடன்படிக்கையின்படி நோர்டிக் நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களை நிமிக்குமாறு அரசு நோர்வேயைக் கேட்டுள்ளது. மேற்படி 3 நாடுகளின் உறுப்பினர்கள் தனிப்பட்ட கோதாவிலேயே தமது பணியைச் செய்கின்றனர். தேசிய பிரஜைகள் என்ற ரீதியில் அவர்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்பதையும் அரசு நோர்வேயிடம் கூறியுள்ளது.

இவ்வாறு அரசு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## உயிலங்குளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. வீதிச் சோதனையில் ஈடுபட்ட படையினர் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது. (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோர் தாக்குதலில் குளப் புனரமைப்புப் பணி யில் ஈடுபட்டுள்ள சிங்களத் தொழிலாளர் கள் இருவர் உயிரிழந்தனர்.

பொலநறுவையைச் சேர்ந்தவர்களான எம்.எச்.அமரசேகர (வயது-45) மற்றும் ஏ. ஜினதாஸ (வயது-42) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

இந்த இரு தாக்குதல்களையும் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினரே மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

(க)


போட்டிப் பரீட்சை வகுப்புகள்
★ முகாமைத்துவ உதவியாளர்
★ அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்
பொதுஉளச்சார்பு | மொழியறிவு
சனி, ஞாயிறு 11.30 - 1.30
D.M.I ஆரியகுளம் சந்தி. யாழ்.

A/L பரீட்சை முடித்த மாணவர்களுக்கான புதிய கற்கைநெறிகள் வெகுவிரைவில் ஆரம்பம்!
CICS Computer Technologies

A/L பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்
விபரங்கள் 11.06.2006 உதயனில்
SCC
NO. 43, Arasady Road,Jaffna.

A/L 2008, 2007
நாடக அரங்கியல்
ஆரம்பம் 10.06.2006
சனி 10 a.m.
By: திரு. ரமேஸ்
2007 Paper Class ஆரம்பம்
(51006)
யூனிவேசல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2008
கலை, வர்த்தக வகுப்புகள்
பிரிவு 2
ஆரம்பம் : 10.06.2006 (7a.m.)
ACC. -பாலவாசன் ECO. கஜீதரன்
COM. -முரளி (பிரிவுII),யசோ (பிரிவுI)
LOG. -சயந்தன் TAM. -குழந்தை
HIC. -பத்மராஜா GEO. -பாபு
HIN. -N.T.தரன் HIST. -பத்மன்
P/sci. -ஸ்ரீரங்கநாத் CHIR. -வசந்தன்
Drama -ரமேஷ்
✱ யாழ் நகரில் தன்னிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழாம் கொண்ட ஒரே நிறுவனம்.
✱ அனுமதிகள் இன்று தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.
✱ எமது நிறுவனத்தில் 2005 O/L கல்வி கற்ற மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

விமானப் பயணச் சீட்டு
★ முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
★ யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை






இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038

EXPOAIR எக்ஸ்போ எயர்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email: jaffna@expoavi.com, reservations@expoavi.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிமனையில் 09.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.